

# சமர்ப்பணம்

கந்தவேற் பெருமான் எழுந்தருளும் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் எம் மூதாதையரான திரு. மருதர் கதிர்காமருக்குக் காட்சிகொடுத்து தனக்குப் பூசை செய்ய பணித்தருள அவரும் பெருமானுக்குப் பக்தியுடன் பூசை செய்து வந்தார். அவருக்குப் பின் சந்ததியினரும் தொடர்ந்து பக்தியுடன் பூசை செய்வதால் பெருமான் ஆலயம் பெருமையுடன் விளங்க அடியார்களும் ஆனந்த வழிபாடுகள் செய்து அருட் பிரவாகங்கள் பெறுகின்றனர். இவ்வாறு அருட் பிரவாகங்களை அள்ளி வழங்கும் எம் குல தெய்வமாகிய ஸ்ரீ செல்வச் சந்நிதிக் கந்தவேற் பெருமானுக்கு நன்றிக் கடமை கொண்டு பொலிவுப் பேரருள் இதழ் கொண்ட இவ் வாடா நல் மலரினால் அர்ச்சித்துப்பாதார விந்தங்களில் பணிவுடன் சமர்ப்பணமாக்குகின்றோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

வழிபடும் அடியவர்கட்கு நல்லருள் பாலித்து பேரானந்தமாக விளங்கும் கந்தவேற் பெருமான் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயம் பற்றிய விபரங்களைப் பலரும் பல்வேறு காலங்களில் பலவாறாகப் பிஸ்தாபித்தாலும் பெரும்பாலோர்க்கு போதிய திருப்தியில்லாது இருக்கின்றது. இதனாலே சில காலங்களுக்கு முன்னர் முருக பக்தரான திரு. முருகேசு சாமியார் அவர்கள் இவ்வாலய வரலாறு பூசை வழிபாட்டு விபரங்கள், பெருமாள் தரிசனக் காட்சிகளை எம் உதவியுடன் அடியார்களுக்கு திருப்தியுறும் வகையில் அமைக்க விருப்பங் கொண்டார். ஏனோ அது இது நாள்வரை இழுபறியாகி இன்று கைகூடும் நிலைக்கு வந்தது வேற் பெருமானின் திருவருளே. திரு. முருகேசு சாமியார் எம்மை விட்டுப் பிரிந்து இறைபதம் எய்திய போதும் அவரது ஆத்தம ஒளியில் இவை பிரகாசிக்கும் என்ற தெய்வ நம்பிக்கையில் தெளிவு பெறுகின்றேன். பெருமான் திருவருளையும் வரலாற்று மகிமைகளையும் பழமை மரபுகளையும் எம் முன்னோர் உரைத்த உபதேசங்கள் உதவி கொண்டு என்னால் இயன்ற வரை சிறப்பாக சமர்ப்பிக்கின்றேன். பல்வேறு அன்பர்கள் பல கர்லங்களில் பக்திபூர்வமாகப் பெருமான் பெருமைகளை பாக்களாக்கியுள்ளனர் எல்லாவற்றையும் சேர்ப்பது இலகுவான காரியமல்ல என்பதால் அவற்றுள் ஒருசிலவற்றை இங்கு இடம்பெறச் செய்துள்ளேன் ஆனாலும் அவ்வாறு பெருமான் பெருமைகளைப் பாக்களாக்கியும் மற்றும் பல பணிகள் மூலம் சிறப்பித்த அனைவருக்கும் மற்றும் அனைத்து அடியார் அன்பர்கட்கும் எனது அன்பு வணக்கத்தைத் தெரிவித்துக் குற்றங் குறைகளிருப்பின் அவற்றை பெரிது படுத்தாத வகையில் பெருந்தனைமையுடன் வரவேற்பீர்கள் எனப் பணிவுடன் இம்மணங்கமிழ் மலரை வெளியிடுகின்றேன்.இம் மலர் வெளியீட எனக்கு உதவி செய்த கனடா வாழ் சித்தன்கேணியைச் சேர்ந்த திரு. S.சிவசுப்பிரமணியம் அவர்கள் குடும்பத்திற்கு மனப்பூர்வ நன்றியைச் செலுத்தி அவர்கட்கு சந்நிதிவேற் பெருமான் நல்லருள் புரியவேண்டுதல் செய்கின்றேன்

நன்றி

அன்பன்
வி. தெய்வேந்திர ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச் சந்நிதி ஆலய வரலாறு

ஈழவழ நாட்டில் காணப்படும் திருத்தலங்களுள் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயமாக ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் விளங்குகின்றது. உலகில் எவ்விடத்திலும் காணப்படாத தனித்துவமான புதுமைப் பொலிவும் தெய்வத் திருவருட் தன்மையும் கொண்டுள்ள இவ் ஆலய வரலாறு கந்தபுராணத்துடனும் தொடர்புடையமை பழமைக்கும் மகிமைக்கும் உரியதாகும். மூர்த்தி தீர்த்த தல மகிமைகள் ஒருங்கே அமைந்து கந்தப் பெருமானது அருள் வெள்ளம் மடை திறந்து பாய்கின்றது. ஆகமவிதிக்ககப்படாத அதற்கும் அப்பாற்பட்ட அன்பு, பக்தி, ஞானம் ஆகியன பிரவாக ஊற்றாகிப் பொலிவு கொண்ட கந்தப் பெருமானை திரு. வேதநாயகம் பிள்ளை அவர்கள் செல்வச் சந்நிதி மேவிய பூரணனே எனப் போற்றிப் பாடியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தெய்வீக கந்தபுராணத்திலே கந்தப் பெருமான் திருச்செந்தூரிலிருந்து வீரவாகுத் தேவரை சூரனிடத்து மகேந்திர புரிக்கு தூதராக அனுப்பிய வேளை வீரவாகுத் தேவரும் அப்பணியை சிரம்மேல் கொண்டு இலங்கையின் வடபால் அமைந்த வல்லிநதிக்கரையின் (தற்போது ஆலயத்தின்மேற்குப்புறமாக அமைந்துள்ளது) கல்லோடைப் பகுதியில் கால் வைத்துச் சென்றார். இங்கு அப் பாதச்சுவடு இன்றும் காணப்படுகிறது. சூரனிடத்துச் சென்றுமீண்டும் திரும்பிய வேளை சந்திக்காலமாகியது. எனவே கந்தப் பெருமானுக்கு சந்திக்காலப் பூசை செய்ய வேண்டிய பணி மனதில் தோன்றி அக்கல்லோடைப் பகுதியிலே சந்திக்கால்ப் பூசை வழிபாட்டினை மேற்கொண்டார். இக் கல்லோடையில் கந்தனைப் பூசித்ததால் கல்லோடைக் கந்தன் எனப் பெயரும் பின்னால் போற்றப்பட்டு வந்தது. கல்லோடையில் சந்நிதிதானம் அமைத்து சந்திக்காலப் பூசை செய்தமை சந்நிதி தலமாகிப் போற்றி மாற்றம் பெற்றது.

இச் செல்வச் சந்நிதி தலத்தில் மற்றொரு தெய்வாம்ச நிகழ்வும் தொடர்ந்தது. வியாழ பகவானது கட்டளைப்படி ஒழுகத் தவறிய தேவலோக கந்தர்வரான ஐராவசு என்பவனைப் பகவான் "நீ பூமியிற் பிறக்கக் கடவாய்" எனச் சாபமிட்டார். கந்தர்வர் தன் பிழையுணர்ந்து பகவானை வேண்டுதல் செய்து பிழையைப் பொறுத்தருளுமாறு மன்றாடப் பகவானும் நீ பூமியில் பிறந்து கதிர்காமக் காட்டிற்கருகாமையில் யானை உருவெடுத்து வரும் நாளில் சிகண்டி முனிவரால் சாப விமோசனம் பெற்றுப் பின் சந்நிதியில் தியானம் செய்து முத்தியடைய அருள் பாலித்தார். இதன் பிரகாரம் கந்தர்வனும் யானை உருவெடுத்து [illegible]ருகே அமைந்த காட்டில் பல அட்டகாசங்களைச் செய்து வரும் வேளை [illegible]வர் கந்தப் பெருமானிடம் இசை நுணுக்களைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டுதல் செய்தார் கந்தப் பெருமான் பொதிகை மலையில் அகத்திய முனிவரிடம் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்குமாறு பணித்தருளினார் அவரும் அங்கு சென்று கற்றுப் பின் கதிர்காமக் கந்தனைத் தரிசிக்க சித்தங்கொண்டு வந்த வேளை யானையானது இவரைத் தாக்க முற்பட்டது. உடனே சிகண்டி முனிவர் அதன் வரலாறை உற்று நோக்கிய பின் வெற்றிலை நுனி ஒன்றினால் வேற்பெருமானை நினைத்து சடாட்சர மந்திரத்தை உச்சரித்து அவ் யானையின் நெற்றியில் அடிக்க அது வீழ்ந்து கந்தர்வனாகியது. உருமாறிய கந்தர்வன் தனக்கு மோட்சமளிக்க வேண்டுதல் செய்ய சிகண்டி முனிவர் நீ வடபால் சென்று சந்நிதி தலத்திலே கந்தப் பெருமானை தியானம் செய்து முக்தியடையப் பணித்தார். கந்தர்வனும் அவ்வாறே இச் சந்நிதிக் கல்லோடைத் தலத்திலே வந்து தியானத்தில் பூவரச மரத்தருகே சமாதியடைந்தமையால் இவ்விடம் தெய்வத்தின் திருவருள் பெற்று மென்மேலும் பொலிவுற்றது. இன்றும் இப் பூவரசமரம் அருள் ஒளி வீசித் தரிசிப்போருக்கு இஷ்டசித்திகள் கிடைக்கப் பெற்றுப் பெருமானின் பெருமானின் திருவருளைப் பொழிகின்றது.

மேற் கூறிய வல்லிநதியாறு பின்னால் அரசியலுடன் பின்னிப் பிணைந்தது. முன்பு கடலுடன் சங்கமித்த இந் நதியை அண்டிய பகுதி வல்லிப் பெருவெளியாக விளங்கிப் பின் வல்லைப் பெருவெளி என்றும் இந் நதியின் மேலே தென்புறத்தே அமைந்த பாலத்தை வல்லைப் பாலம் என்றும் கூறப்பட்டது. இந் நதியின் தொடுவாயில் தொண்டைமான் என்னும் அரசன் வெட்டிக் கடலுடன் சங்கமிக்க விட்டதால் அது ஆறாகியதுடன் தொண்டைமானாறு என வழங்கப்பட்டு ஆற்றுப்பகுதிக் கிராமத்துக்கும் தொண்டைமானாறு என்று அழைக்கப்பட்டது. தொண்டைமானாறு என்னும் கிராமத்தில் அமைந்த செல்வச் சந்நிதித் தலத்தால் இக் கிராமம் நாளடைவில் பல்வேறு சிறப்புக்களையும் பெற்று விளங்கிக் கொண்டிருக்கின்றது. கடல் நீருடன் தொடர்பு கொண்டதால் உப்பு நீர் ஆற்றின் பகுதிகட்கு சென்று கரணவாய்ப் பகுதியில் உப்பு விளையலாயிற்று. இவ்வுப்புக்களை ஆற்று முனையில் மால் அமைத்துச் சேமிக்க நாளடைவில் இக்கரை உப்புமால் எனப் பெயர் பெற்றதோடு வாணிபமும் சிறப்புற்றது. அக்காலத்தே ஆட்சி செய்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரும் வணிக முறையினால் இப்பகுதிக் காணிகளுக்குப் பதிவேடுகள் உண்டாக்கி "தோம்பு" என்னும் காணி உறுதிகளை ஏற்படுத்தினர். இத் தோம்பு உறுதிகளில் செல்வச் சந்நிதித் தோற்ற விபரங்கள் இருப்பதும் தொடர்ந்து ஆலய பதிவேடுகள் உண்டாக்கியதுடன் ஆலயப் பதிவேடு என்னும் பதிவேடு முறை உருவாகி வந்தன. இவ்வாறு உருவான விபரத்தில் திரு. மருதர் கதிர்காமருக்கு செல்வச் சந்நிதி ஆலயத் தொடர்பு விபரிக்கப்பட்டுள்ளது.

திரு. மருதர் கதிர்காமருக்கு செல்வச் சந்நிதியிலே ஏற்றட்ட பிணைப்பு வரலாறு பக்தி வழிபாட்டுக்கும் தெய்வத் திருவருட் மரபுச் சிறப்புக்குமுரியதாக அமைகின்றது. 19ம் நூற்றாண்டின் முற்பகுதியிலே இக் கிராமத்தைச் சேர்ந்த குருகுலவம்ச முருக[illegible]தர் கதிர்காமர் நாள்தோறும் இப் பூவரசு மரத்திலருளும் கந்தவேற் பெருமானை[illegible]தன் தொழிலைச் செய்து வரும் வேளையில் முருகப் பெருமான் இவரை ஆட்கொள்ள நினைத்து

சிறுவனாகக் காட்சி கொடுத்து தன்னிடம் வருமாறு அழைக்க கதிர்காமரும் அங்கு செல்ல மாயமானார். கதிர்காமர் திகைப்புற்று பரிதவிக்க கதிர்காம இவ்விடத்தில் எனக்கு பூசை செய்வாய் என்று பணித்தருள கதிர்காமர் பதைத்து அடியேன் பூசைக்குகந்தவர் அல்லர் பூசை முறையேதும் அறியேன் என்றும் மனம் நொந்தார் உடனே பெருமான் கவலைப்படாதே நீ ஏற்றவன் என்றும் உனக்கு பூசை முறைகளை கற்பிக்கிறேன் எனக் கூறி கதிர்காமம் கூட்டிச் சென்றார். செல்லும் வழியில் இத்தலத்தில் வீரவாகு தேவர் முதல் ஐராவசு வரை உண்டான பூர்வீக தெய்வத் தன்மைகளைக் கூறி கதிர்காமத்தில் வாய் கட்டி பூசை செய்யவும் மௌன பூசையைக் காண்பித்து மீண்டும் ஆற்றோரத்தே காட்சியளித்து ஆலம் இலையில் அமுது படைக்க கூறினார். அவரும் அவ்வாறே பூசை வழிபாட்டினை மேற்கொண்டார். நாளடைவில் கதிர்காமர் நேர் எதிரே வீற்றிருந்து ஆலய அமைப்பு, பூசை வழிபாடுகளையும் எடுத்துரைத்து அருளிவந்தார். கதிர்காமரும் அவ்வாறே செயற்பட்டார்.கதிர்காமக் கொடியேற்றத்திற்கு உளுத்தம் பிட்டும் தீர்த்தமாடி வந்தபோது பயத்தம் துவையலும் இளநீரும் அமுதாக கந்தவேற் பெருமானுக்கும் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் படைக்க கூறியதற்கமைய அம்மரபு இன்றும் தொடர்கிறது. இவ்வாறு அருட்பூசை வழிபாட்டினால் கதிர்காமர் மனத்திருப்தி பெற்றார். நாளடைவில் அவர் வம்சம் விருத்தியாகி அறுவர் சந்ததியினராகினர். அவ்வாறு சந்ததி இன்று அறுபதுக்கும் மேற்பட்டபோதும் கதிர்காமர் செய்த பணியாவும் மரபு மீறா வகையில் ஆலய அமைப்பு மீறா வகையில் அமைகின்றது. பூசை வழிபாட்டின் மகிமை பெற்ற ஆலயத்தில் பல அடியார்களும் நாளடைவில் கலந்து கொண்டார்கள். இவ்வூர் ஆண்டியப்பர் என்பவர் முதன்முதலாக ஆலயத்தில் பூசை நேர்த்தி செய்து கொண்டார். அவரைத் தொடர்ந்து ஊர் மக்களும் அயல் ஊர் கெருடாவில், வல்வெட்டித்துறை, கதிரிப்பாய் பகுதி வாழ் அடியார்களும் வழிபட்டு செய்தனர். நாளாக ஆலயம் ஸ்திரமாக அமைக்கப்பட்டது. அக்கரையில் காணப்பட்ட பனை, தென்னை ஓலைகளால் ஆலயம் வேயப்பட்டது. இன்று அப்பகுதி மக்கள் அந்நினைவு கொண்டு மரபுப் பூசை வழிபாடுகளைச் செய்கின்றார்கள். காலக்கிரமத்தில் கட்டிங்கள் சுற்றாடல் வசதிகள் விருத்திகள் பெற்று பூசை வழிபாட்டிலும் சிறப்புக்கள் விசேடங்கள் அமைந்து சைவ மக்களின் பக்தித் தலமாகியது. அடியார்களும் தெய்வத் திருப்பணிகளை மனப்பூர்வமாக செய்துவரலாயினர். இவ் ஆலயத்திற்கு அடியார் மானிப்பாய் செல்லமுத்து சோமசுந்தரம் அவர்கள் அதியுயர் மணிக்கோபுரமும் சுற்றாடலில் பல மைல்கள் தூரத்துக்கு ஓங்கார ஒலியுடன் சந்நிதிப் பெருமானை நினைத்துக் கொள்ளும் வகையில் ஒலிக்கும் கண்டாமணியும் அமைந்தது மேலும் சிறப்பானது. நாளாக அடியார்கள் தொகை அதிகரிக்க ஆலய உரிமையாளர்கள் ஒன்றுகூடித் தமக்குள்ளே ஆலயப் பணிகளையும் சுற்றாடல் வசதிகளையும் சீரிய முறையில் செயற்படுத்த நிர்வாகம் அமைத்துச் செயற்பட்டார்கள். இந்நிர்வாகச் செயற்பாட்டிற்காக யாப்பு அமைப்பு விதிமுறைகளை பிரபல சட்டத்தரணி திரு. [redacted]ணி அவர்கள் அமைத்துக் கொடுத்தார். இதனால் இன்றும் முருகப் பெருமான் ஆல[redacted]ணிகளும், சுற்றாடல் வசதிகளும் முன்னேற்றமாகி வருகின்றதோடு அடியார்களும் பரமதிருப்தியுறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காபிஷேகம்

ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகப் பெருமானின் விசேட பூசை வழிபாடுகளில் சங்காபிஷேகம் விசேடமானதாகக் கருதப்படுகின்றது. முதன் முதலாக 1938ம் ஆண்டிலே இவ்வாலயத்தில் சங்காபிஷேகம் ஆரம்பிக்கப்பட்டது. மற்றும் சைவ ஆலயங்களில் நடைபெறுவது போலவே இவ்வாலத்தில் சங்காபிஷேகம் நடைபெற்றாலும் தனித்தன்மையுடன் பக்திமயமாக நடத்தப் படுகின்றது. காலையிலே சங்குப் பூசையும் 11மணியளவில் சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பெருமாள் வீதிவலம் வருவதும் நடைபெறும். 1938ம் ஆண்டு முதல் இவ்வாலயத்தில் வருடாவருடம் இச்சங்காபிஷேகம் பங்குனி மாதத்தில் நடைபெறும். கம்பர் மலையைச் சேர்ந்த திரு. சி. கதிர்காமு சிந்தாமணி ஓவசியர் என்பவரே இதனை உபயமாக செய்யத் தொடங்கினர். அவருக்குப் பின் அவர் சந்ததியினர் இன்றும் அச் சங்காபிஷேக உபயத்தினை தொடர்ந்து மேற்கொள்கின்றனர். அன்று விசேட மேளக் கச்சேரிகளும் இடம் பெறுவதுடன் அடியார்களுக்கு அன்னதானமும் நடைபெறும். இத்தினத்தில் 1008சங்குகளால் அபிஷேகம் நடைபெறும்.

தற்போது இவ்வாலயத்தில் தொடர்ந்து 108 சங்காபிஷேகங்களும் அடியார்களின் நேர்த்திக்கமைய நடைபெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சண்முக அர்ச்சனை

முருகப் பெருமான் ஆலயங்களில் பூசை வழிபாடுகளில் சண்முக அர்ச்சனை வழிபாடு மிக முக்கியமானதாகும். இவ்வழிபாடும் இவ்வாலயத்தில் தனித்துவமானதாக கருதப்படுகிறது. பெருமானுக்கு 6 வகைப்பழங்களால் அபிஷேகம் செய்து ஆறுவகைப்பழங்களாலும் ஆறுவகை அமுதுகளும் நிவேதித்து ஆறுவகை வில்வங்கள் பூக்களால் ஆறு பூசகர்களால் அர்ச்சித்து ஆறு பஞ்சாராத்தி கற்பூர ஆராதனை செய்யப்படும் பக்திமயமான வழிபாடாகும். இவ்வாலயத்தில் இப்பூசை வழிபாட்டினை முதல்முதல் நேர்த்தியாக செய்தவர் கரவெட்டி புறாப்பொறுக்கியைச் சேர்ந்த திரு. சுந்தரம் என்னும் பக்திமான் ஆவார். இவரும் வருடாவருடம் இப்பூசை வழிபாட்டினை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சங்காபிஷேக சண்முக அர்ச்சனை வழிபாடுகளை இவ்வாலயத்தில் முதன்முதலாக இடம்பெறச் செய்தவர் பழம்பெரும் பூசகர் திரு. செல்லையா ஐயர் விசாகரத்தின ஐயர் ஆகும். என்பதும் விசேடமாக குறிப்பிடவேண்டியதாகும்.

இன்று இவ்வாலயத்தில் சண்முக அர்ச்சனை அடிக்கடி இடம்பெறுவது குறிப்பிட வேண்டியதொன்றாகவும் உள்ளது.

# புராண படலங்கள்

சைவப் பெருமக்கள் போற்றும் பிள்ளையார் புராணம், கந்த புராணம், திருவாதவூரடிகள் புராணம் மற்றும் மற்றும் கண்ணகி கதை என்பன இவ்வாலயத்தில் பூஜை வழிபாடுகளின் பின்னர் உரைப்பது வருடந்தோறும் [illegible] நடைபெறுகின்றன. பிள்ளையார் புராணத்தை விநாயக சஷ்டி தினத்திலும், கந்த புராணத்தை நவராத்திரி கும்பபூசையுடனும், திருவாதவூரடிகள் புராணத்தை திருவெம்பாவை பூசையுடனும், கண்ணகி கதையினை தீர்தமெடுப்புப் பூஜையன்றும் ஆரம்பிப்பது வழக்கமாகும். செல்வச் சந்நிதி பூசகர் பரம்பரை திரு. ஆ. வேதநாயகம், திரு. க. ஆறுமுகசாமி ஐயர், திரு. செ. பொன்னுத்துரை ஐயர், திரு. செ. விசாகரத்தின ஐயர் மற்றும் திரு.சி.சுப்பிரமணியம் (இளைப்பாறிய சார்ஜன்ட்) ஆகியோருடன் குடாநாட்டின் பல்பாக பண்டிதர்களும் மிகுந்த ஈடுபாடு கொண்டதும் கண்ணகி கதையினைக் கதிரிப்பாய் திரு. செல்லையா(ஆசை) என்பவரின் கனிவான கனகச்சித கீத ஒலிகளும் இன்றும் நெஞ்சை விட்டு நீங்காதுள்ளது. இன்று திரு. ஆ. சிவசண்முக ஐயர் மிகுந்த ஈடுபாடு கொள்வது குறிப்பிடத்தக்கது. இவரோடு தற்போது கதிரிப்பாய் திரு. அமிர்தலிங்கம் அவர்களும் ஈடுபாடு கொண்டதுடன் ஆலயத்தில் பல்வேறு நித்திய தொண்டுகளையும் புரிகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலர் அவர்களின் பாராட்டுரை

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் வடமாராட்சியில் அமைந்திருப்பது இப்பிரதேசத்திற்கு ஒரு சிறப்பாக விளங்குகின்றது. இப் பகுதியில் ஆலயத்தை சூழ உள்ள ஆல், அரசு, இலுப்பை, புளி, மருது முதலிய விருட்சங்கள் இயற்கை அழகை அள்ளித்தந்து அதன் எழிலுக்கு மெருகூட்டுகின்றன. இவ் ஆலயத்தின் மிக நீண்ட வரலாற்கைக்கொண்ட மலராக இவ் வெளியீடு வரப்பெறுவது குறித்துப் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் இவ்வாலயத்திற்கு விஷேட உற்சவ காலங்களில் வருகை தந்திருக்கின்றார்கள். தற்போது கூட போக்குவரத்துப் பிரச்சனைகள் மத்தியிலும் கணிசமான அளவு பக்தர்கள் வருவதற்கு ஆர்வங் கொண்டிருக்கின்றார்கள். இதனை விட பிரசித்தி பெற்ற வழிபாட்டுத் தலங்களில் ஒன்றாகவும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஓர் ஆலயமாகவும் விளங்குவது இங்கு குறிப்பிடத் தக்கது.

இவ்வாலயத்தைச் சுற்றி ஆச்சிரமங்கள், மடங்கள் பல இருந்தன. யுத்த காலத்தால் இவையாவும் பெரிதும் பாதிப்புக்குட்பட்டதால் புனருத்தாரண தேவையும் அதிகமாக உணரப்பட்டது. இதுவரைக்கும் மஹோற்சவ வழிபாடுகள், கும்பாபிஷேகம், விஷேட உற்சவம்போன்றன தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. ஆலய முன்மண்டப மணிக்கோபுர திருப்பணிகளும் இதுவரை காலமும் சிறப்பாக நடைபெற்று வந்துள்ளதை இங்கு குறிப்பிடுவது சாலப் பொருந்தும். அவ்வகையில் இம் மலர் வெளியீட்டுக்கு எடுக்கப்பட்ட முயற்சியும் மிகவும் வரவேற்க தக்கதொன்றாகும். மேலும் ஆலயத்தின் தேவைளை நாமும் அரசாங்க அதிபருக்கும் தொடர்புடைய அமைச்சு மட்டங்களுக்கும் விளக்கியுள்ளோம். எனினும் இதுகுறித்து நீண்ட காலம் காத்திருக்க வேண்டிய தேவையும் உள்ளது. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்திலும் இத்தகைய திருப்பணி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது மகிழ்ச்சியைத் தருகின்றது

எமது கலாச்சாரப் பாரம்பரியங்களை இவ்வாலயமும், ஆலய சுற்றாடலும் பேணிப்பாதுகாப்பது எமது சமூகத்திற்கு மிகவும் வேண்டப்படுவதொன்றாகும். மலரப்போகும் இரண்டாயிரமாம் ஆண்டில் செல்வச் சந்நிதி ஆலய வரலாறு அடங்கிய மலர் வெளியிடுவதையிட்டு இம்முயற்சிக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

*திரு. ஆ. சிவசுவாமி*
*பிரதேச செயலர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் பணிகள்

20.03.1988ல் நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்தின் பின் மடைப்பள்ளி, களஞ்சிய அறைகள் அமைக்கப்பட்டன. சுற்றாடல்களும் சீரடைந்தன. தொடர்ந்து பல பணிகளும் பெருமானின் உற்சவத்துக்கான வாகனங்களும் மின்சார இணைப்புகளும் சீராக்கப்பட்டன. எனினும் 1990ல் மீண்டும் வன்முறை ஆரம்பிக்க நாளுக்குநாள் ஆலயச் சுற்றாடல்கள், கட்டிடற்கள், மணிக்கோபுரம், மடங்கள் சேதமாகின. பூசை வழிபாடுகள் பதட்டத்துடனும் காலத்திற்கேற்ப பல செயற்பாடுகள் சீரற்றும் எனினும் வழமை செயற்பாடுகள் எளிமையாகவும் வளமையாக நடைபெற்றன. இந்நிலை 1995 வரை நீடித்தது. 1996ல் சற்று வன்முறை ஓய்ந்த பின்னர் மணிக்கோபுரம் ஸ்திரமாக்கப்பட்டதுடன் 1997 தைப்பூச தினத்தில் மணிக்கோபுர கலசாபிஷேகமும் நடைபெற்றது. அன்று முன் மணிமண்டப பத்திக்கான அத்திவாரமும் இடப்பட்டது. பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி அவர்கள் அடிக்கல் நாட்டி பணியினை ஆரம்பித்தார். அடியார்களின் ஆர்வமிக்க பங்களிப்பினால் அழகிய மணிமண்டபமும் உருவாகி அவ்வருட மஹோற்சவத்தின் போது அடியார்களின் மனத்திருப்தியுடன் இன்று பொலிவுடன் தோற்றமளிக்கின்றது. அதனைத் தொடர்ந்து நந்தி மண்டபமும் ஆலயச் சுற்றாடலில் அடியார்களின் பொது வசதிகளும் பூர்த்தியாகின. இப்பெரும் பணிகளில் முக்கிய பொறுப்புக்களை யாழ் ரூலின்ஸ் ஸ்தாபனத்தினர் பொறுப்பேற்று சிறப்புடன் செயலாற்றியமை குறிப்பிடத்தக்கது. இன்று ஆலயம் முன்போல சிறப்புடன் அடியார்கள் மனத்திருப்தியுடன் அருள் ஒளி பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அடியார்களும் அகமகிழ்ந்து பூசை வழிபாடுகளில் சிறப்புடன் கலந்து ஸ்ரீ செல்வச் சந்நிதி கந்தவேற் பெருமானின் அருள் மழையில் திளைத்துக்கொண்டு பேரானந்தமடைகின்றனர். கந்தவேற் பெருமானின் காலடிகளை காலமெலாம் நினைத்து வழிபடுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசேட நன்றிகள்

திரு. கதிர்காமர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இவ் ஆலயம் ஆரம்பத்தில் ஓலைக் குடிசைகள் போலிருந்தது. நாளடைவில் ஸ்திரமான கட்டிடங்களைக் காலக்கிரமத்தில் கால சூழ்நிலைக்கேற்ப மாற்றமடைந்த போதும் பழைய மரபு முறையிலே வழிபாடுகளும் தோற்ற அமைப்புக்களும் அமைகின்றது குறிப்பிடத்தக்கது. சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னர் முருகப் பெருமான் மூலஸ்தானமும் அதனோடு இணைந்த மண்டபங்களும் விநாயகப்பெருமான் மூலஸ்தானமும் பிள்ளையார் குளமும், வள்ளியம்மன் மூலஸ்தானமும் கட்டப்பெற்றது. விமானம் அமைத்து கலசமும் ஸ்தாபிக்கப் பட்டது. இவற்றை முறையே கம்பர்மலை வேலுப்பிள்ளைப் பரியாரியார் அவர்களும் குடும்பத்தினரும், வியாபாரிமூலை அன்பர் திரு.சின்னமுருகுப்பிள்ளை சந்ததியினரும் தொண்டைமானாறு தம்பர் குடும்பமும் தொண்டைமானாறு முருகேசு குடும்பத்தினரும் பேருதவி புரிந்தனர். பின்னர் நாகதம்பிரான் மண்டபமும் பல அன்பர்கள் உதவியாலும் தீர்த்த மண்டபம் வல்லை திரு.பரஞ்சோதி அவர்களும் ஆறுமுகசுவாமி மூலஸ்தானத்தை வல்வெட்டி திரு.நா.அருணாச்சலம் குடும்பத்தினரும் வைரவர் மூலஸ்தானத்தை மயிலியதனை சின்னத்துரை பரமகுரு சார்பில் தாயார் பூமணி அவர்களும் பிள்ளையார் முன்மண்டபத்தை கெருடாவில் தளையசிங்கம் குடும்பத்தினரும் மடைப்பள்ளி, களஞ்சிய அறைகளை திரு. முருகேசு சாமியாரும் அவரது அடியார்களும் அத்துடன் முன் மணி மண்டபத்தின் பெரும் பணியிலும் பங்குகொண்டனர். அத்துடன் வேண்டிய காலங்களில் தொடர்ந்து திருத்தலப் பணிகளையும் விஷேட உபயங்களையும் மேற்கொள்கின்றனர். சமீப காலமாக மைபூச்சுப் பணியை நாகர் கோவில் திரு. அழகராசா குடும்பத்தினர் அக்கறையுடன் ஈடுபட்டுக் கொள்கின்றனர்.

பெருமான் வீதியுலா வரும் வாகனங்களையும் அன்பர்கள் அன்பளிப்புச் செய்தபோதும் குறிப்பிடும் சிலர் தொடர்ந்தும் திருத்தங்களை மேற்கொள்வதுடன் உற்சவ காலங்களிலும் பங்கு கொள்கின்றனர். இவற்றில் கேடகம் தொண்டைமானாறு திருமதி. மயில்வாகனம் குடும்பத்தினரும், கதிரிப்பாய் மக்கள் வெள்ளைக்குதிரையும், தொண்டைமானாறு தம்பசிடடி மக்களால் காராம்பசுக்களும், மயிலிட்டி வ[illegible]சிங்கம் குடும்பத்தினர் பறவைமயில் வாகனமும், உடுப்பிட்டி வேலுப்பிள்ளை குடும்பத்தினர் சிங்கமும், சுன்னாகம் கந்தரோடை அன்பர்கள் மாடுவாகனமும், மற்றும் வாகனங்களை அவ்வவ்காலத்தில் மற்றும் அன்பர்களும் இரத்தினபீடத்தை வல்வை இராமசாமிப்பிள்ளை குடும்பத்தினரும், இந்திர விமானத்தை வல்வை திரு. செல்லத்துரை அவர்கள் குடும்பத்தினரும் சப்பரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்வை திரு. குழந்தைவேலு குடும்பத்தினரும், தேரை வல்வை திரு. வெங்கடாசலம் சின்னத்தங்கம் குடும்பத்தினரும், கைலாய வாகனத்தை இருபாலை திரு. இராசையா குடும்பத்தினரும் அன்பளிப்புச் செய்தனர்.

ஆரம்ப காலத்தில் இவ்வாலயத்திற்கு மஹோற்சவ காலங்களில் வல்வை இளையபெருமாள் மின்னொளி அமைப்பு வழங்கினார் பின்னர் மஹோற்சவ காலங்களிலும், விஷேட தினங்களிலும் மின்னொளி அமைப்புக்களை மேற்கொண்ட திரு. சிவசுப்பிரமணியம் (பேபிசோடா உரிமையாளர்) நாளடைவில் ஆலயத்திற்கு தனி இயந்திரத்தையும் அமைத்துச் சிறப்பாக்கியதுடன் மின்சார சபை மின்சார இணைப்பையும் ஏற்படுத்திச் சிறப்பாக செயல்படுத்தினர். அத்துடன் வீதிகளில் குடிநீர் வசதிகளையும் செய்து எம்பெருமான் உற்சவத்திற்கு ஆட்டுக்கடா வாகனமும் அன்பளிப்புச் செய்தார். கம்பீரத்தோற்றத்துடன் கலையழகு மிளிரும் சூரனை தொண்டைமானாறு திரு. கந்தசாமி(ஹிட்லர்) இந்தியாவிலிருந்து தருவித்து அன்பளிப்புச் செய்தார். சூரசம்ஹார தினத்தன்று அவரும் சகோதரர்களும் சூரன்போர் நிகழ்வுகளை ஏனையோருடன் அடியார்கள் திருப்தியுற வருடந்தோறும் வழமையாக்கி அது இன்றும் அவர்களது சந்ததியினரால் பேணப்படுகின்றது.

சில காலங்களுக்கு முன்பதாக தொண்டைமானாறு திரு. வே. தில்லையம்பலம் அவர்கள் அடியார்கட்கு சந்தனம் வழங்கும் தொண்டினையும் ஆரம்பித்து வைத்தார் அத்தோடு தொடர தில்லையம்பலம் ஞாபகார்த்த தர்மகர்த்தா திருப்பணிச் சபையினையும் நிறுவி அத்தொண்டும் நடைபெறுகிறது.

1982ம் ஆண்டு மேலதிக மின்னிணைப்புக்களை ஏற்படுத்தியதோடு பெருமான் வீதியுலாவிற்கும் மின்வசதிகளையும் யாழ் உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தைச் சேர்ந்த நல்லூர் திரு. இரத்தினசிங்கம் குடும்பத்தினர் உதவினார்கள். வன்முறைக்குப் பின்னரும் அவரும் கரவெட்டி திரு. விக்னானந்தமூர்த்தி அவர்களும் மீண்டும் மின்சார இணைப்பிற்கு உதவினர். அத்தோடு உணவுக்கட்டுப்பாட்டுத் திணைக்கள ஊழியர்கள் மூலம் சிரமதான முறையில் ஆலயச் சிதைவுகளும் அகற்றப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1981ல் வன்முறைகளால் சேதமாக்கப்பட்டு இராணுவத்தினர் வசமிருந்த ஆலயம் ஆலய உரிமையாளர்களின் அக்கறையான ஊக்கத்திற்கு மதிப்பளித்து மீண்டும் ஆலயத்தை ஆலய உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப் பெரிதும் உதவியவர் பிரிகேடியர் ரூபசிங்க அவர்கள். அந் நாட்களில் இதற்கான ஆரம்ப மகஜரைத் தயாரித்தவர் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை. மகா வித்தியாலயத்தில் கடமையாற்றிய அதிபர் திரு. செ. யோகச்சந்திரன் அவர்கள் இவரது சேவைக்காலத்தில்தான் வித்தியாலயமும் பல்வேறு முன்னேற்றங்களையும் அடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து அதிபர் திரு. அனந்தராஜ் அவர்களும் மகஜர்களைத் தயாரித்துதவியும் ஆலய உற்சவங்களில் பெருமான் தொண்டுகளோடு அடியார்களுக்குப் பொதுச்சேவையும் வழங்கியமையும் குறிப்பிடத்தக்கன. இவர்களுடன் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி உப அதிபர் திரு. விநாயகமூர்த்தி அவர்களும் பல்வேறு ஸ்தாபனங்கட்கும் ஆலய நிலைமைபற்றிய மகஜர்களைத் தயாரிக்க உதவினார். அக்காலத்தில் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு.வை.வேலும்மயிலும், பரு.பா.உறுப்பினர் திரு. க.துரைரத்தினம் ஆகியோரும் அடிக்கடி ஆலய உரிமையாளர்கட்கு ஆறுதல் உரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கினார்கள். அரசிடமிருந்து எவ்வித நிவாரணமும் பெறுமுடியாது போகவே வர்த்தகர் திரு. V.R. வடிவேற்கரசன் அவர்கள் இந்திய உயர்ஸ்தானிகரிடம் உதவிகோரும் மகஜரைத் தாயாரிக்க உதவியதோடு திரு. டிக்ஸிற் அவர்களைச் சந்தித்து உரையாடி உதவிகளைச் செய்யக் காரணமானார். அத்துடன் இவர் 1982ல் முதன்முதலாக இலங்கை வானொலியில் முதல்முதலாக தேர் அஞ்சல் நிகழ்ச்சியை நேரடியாக ஒலிபரப்பு ஏற்பாடு செய்தமையும் குறிப்பிடத்தக்கவர். தந்தையார் V.இராஜசேகரம் அவர்களும் குடும்பத்தினர் சகோதரர்களும் இன்னும் தொடர்ந்து மரபுப்பூசையான ஆண்டியப்பர் பூசையினை மேற்கொள்கின்றனர்.

1986ல் ஆலயம் சேதமான பின் ஆலய நிலைமையை வீடியோப் படம் எடுக்கவும் அக்காலத்தில் ஆலயபூசகர் குடும்பங்களுக்கு உலர்உணவு நிவாரணமும் வழங்கியதோடு புனருத்தாண பணியின்போது தொண்டர்களுக்கு தேநீர் வழங்கியும் யாழ் சர்வோதய ஸ்தாபனத்தினர் உதவினர். இதே போல நிவாரணங்களை இந்திய செஞ்சிலுவைச் சங்கமும் வழங்க திரு.V.C.குப்தா முழு முயற்சி எடுத்தோடு கும்பாபிஷேகத்தின் பின்னரும் ஆலயத்திற்கு வந்து பக்திவழிபாடு செய்து சென்றமையும் குறிப்பிடத்தக்கது. முன்னாள் அரச அதிபர் திரு. யோகேந்திரா துரைசாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகேந்திரா- நவரத்தினசாமி,

அவர்கள் இந்து ஒன்றியத் தலைவராக இருந்து எமது நிலைகளை அனுதாபத்துடன் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு 50 ஆயிரம் நிவாரணத்தையும் கும்பாபிஷேகத்தின் பின்னர் வழங்க காரண கர்த்தாவானார். இவர் மேலும் இலங்கையில் ஐந்து சைவ ஆலயங்களை புனித பிரதேசமாகவும் அதனுள் எமது ஆலயமும் ஒன்றாக சேர்க்கப்பட்டிருந்ததையும் குறிப்பிட்டேயாகவேண்டும்.

இவ்வாலயத்தை 1986ல் மீண்டும் புனரமைக்க பெருமகிழ்ச்சியுடன் குறுகிய காலத்தில் நிறைவேற்றிய அமரர் தெல்லிப்பழை திரு. இரத்தினம் என்ஜினியர் எம் நெஞ்சை விட்டு நீங்காதவர்.இவ்வாலயத்திற்கு மயில் வாகனமொன்றை அன்பளிப்பாகத் தந்தமையுடன் அவர் பணி ஆரம்பித்து பிள்ளையார் மண்டபத்தின் முன்புறத்தில் அமைந்த அலங்கார வேலைப்பாட்டினையும், பிள்ளையார் குளத்திலிருந்து வள்ளியம்மன் குளத்திற்கு நிலத்தடியில் பைப் பொருத்தியும் குறுக்கப்பட்ட பிள்ளையார் குளத்தினை சீமேந்தினால் நன்கு ஸ்திரமாக்கியும், பற்பல தொண்டுகளைப் புரிந்தார் என்பதையும் குறிப்படவேண்டும். கும்பாபிஷேக தினத்தன்று செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை சமயச் சொற்பொழிவாற்றவும் ஏற்பாடாக்கினார். காலத்திற்குக் காலம் உரும்பிராய் திரு. சிவபாலன் டாக்டர் அவர்களும் அம்பனை அலுமீனியத் தொழிற்சாலை உரிமையாளர் திரு. சண்முகலிங்கம் அவர்களும் தேர்த்திருப்பணி மற்றும்ஆலய முன்னேற்றங்களுக்கு வேண்டிய உதவிகளை மனத்திருப்தியுடன் நல்கியதுடன் அடிக்கடி எம்பெருமானைத் தரிசிக்கத் தவறுவதும் இல்லை

எமது ஆலய வரலாறுகளையும் பெருமானின் திருவருட் செயற்பாடுகளும் பல்வேறு காலங்களில் கதாப்பிரசங்கங்கள் மூலமும் பாக்கள் வெளியிட்டும் அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி ஆசிரியர் பெரும் பணி ஆற்றியமையும் குறிப்பிடத்தக்கது. கும்பாபிஷேகதினம் வருடாவருடம் சிறப்பாக நடைபெற திரு. முருகேசு சாமியார் ஏற்பாட்டினால் அவரது அடியார்களில் ஒருவரான சிறுப்பிட்டி இளைப்பாறிய ஆசிரியர் திரு. கந்தையா அவர்களும் மக்களும் தொடர்வது சிறப்பாகக் குறிப்பிடவேண்டும். சித்திரத்தேர் உருவாக்கிய வேளையிலும் திரு. முருகேசு சாமியார் அடியார்கள் பல பங்களிப்புக்களைச் செய்திருந்தனர். தேருக்கான மரங்களைப் பெறுவதில் பெருமுயற்சி எடுத்தவர்களுள் உடுப்பிட்டி பா.நோ.கூ.சங்க வீ. சின்னத்துரை அவர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்டேயாகவேண்டும். சித்திரத்தேருக்கான பாமலர்களை வல்வை சிவ ஆறுமுகம் வெளியிட்டமையும், இன்னும் பல தொண்டுகளையும் சிறப்பாக மேற்கொண்டார். இந்திய ஆச்சாரியர்களின் கைவண்ணம் மிளிர்ந்தது. மயிலிட்டி திரு. ஜெயராசா அவர்களின் அழகிய நுணுக்க வேலைப்பாட்டு அமைப்புங்கொண்ட சித்திரப்பெருந்தேர் இரு வருடங்கள்தான் வீதியில் உலாவர முடிந்தது. ஏனோ அதுவும் வன்முறையில் அகப்பட்டு அழிந்தது. ஆனாலும் அருகே இருந்த பழையதேர் எவ்வித பாதிப்பும் ஏற்படாது இன்றும் பெருமான் பவனிவருவது பெருமானின் அற்புதங்களில் சிறப்புக்குரியதாகும்.

இவ்வாலயத் திருப்பணிக்காக வங்கிக் கணக்கு ஒன்றை ஆரம்பிக்க நாம் எடுத்த முயற்சிக்கு உதவி புரிந்த இலங்கை வங்கி பருத்தித்துறைக் கிளையின் திரு. இந்திரகுமார், திரு. சீவரெத்தினம் ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். இதனால் 1988ம் ஆண்டுமுதல் சேமிப்புக்கணக்காக 16203 இலக்கத்தில் கணக்கு ஆரம்பித்து உள்ளூர், வெளிநாட்டு அடியார்கள் நிதிகளை வாரிவழங்குகின்றமையால் பெருமான் திருப்பணிகளும் திட்டமிட்டபடி நிறைவேறுகின்றன. திருப்பணி முயற்சிகளுக்கு லண்டனில் திரு. சரவணப்பிரபு குடும்பத்தினர் நல்ல செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதும் சிறப்பானது. ஆலயத்தின் பூக்கொல்லையைத் தொண்டைமானாறு பொன்னுச்சாமி-தையல் சந்ததியினர் கண்ணும் கருத்துமாக கவனிக்கின்றனர் அதிலும் திருமதி. பரஞ்சோதி குடும்பத்தினரும் லண்டன் திரு. நா. ஞானதிலகம் அவர்களும் மிகுந்த அக்கறை கொள்பவர்கள். இன்று ஆலயம் பழமை அமைப்பு மாறாவகையில் காலத்திற்கேற்ப அழகுறவும் ஸ்திரமாகவும் விளங்கப்பெருமுயற்சி எடுத்த யாழ் ரூலின்ஸ் தாபன திரு. சிவசேகரமூர்த்தி அவர்களும் ஏனை பணியாளர்களும் செயற்பாடுகள் விஷேடமானவை.

இம்மலர் வெளியீட்டிற்கு நல்லாசிகளை வழங்கியதோடு பங்களிப்பு ஆற்றியவர்களில் நீதிபதி. திரு. ந. யோகசிகாமணி அவர்களும் திருமதி. சந்தனா நல்லலிங்கம் அவர்களும் விஷேசமாக் குறிப்பிடவேண்டியதாகும். திரு. ந. யோகசிகாமணி அவர்கள் இவ்வூரில் வசித்துக்கொண்டு சந்நிதிப் பெருமான் காரியங்களில் மட்டுமன்றிப் பொதுச்சேவைகளிலும் ஈடுபட்டவர் ஆலய யாப்புவிதிகளை அமைத்துத் தந்து சீரிய நிர்வாகத்திற்கு வழிவகுத்தவர். 1978ம் ஆண்டு இவ்வாலய நிர்வாகத்தில் மாற்றஞ்செய்ய திரு. ஆறுமுகம் நாடராசாவும் ஏனையோரும் மேற்கொண்ட செயற்பாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறியடிக்க பரு.நீதிமன்றத்தில் பல சிரேஷ்ட வழக்கறிஞர்களுடன் சேர்ந்து பாடுபட்டவர் திருமதி. சந்தனா நல்லலிங்கம் அவர்கள் ஆலய உரிமையாளர் திரு. நல்லலிங்க ஐயர் அவர்களின் மனைவியாவார். திரு. நல்லலிங்க ஐயர் ஆலய முன்னேற்றத்திற்காக கொழும்பு இந்துப் பேரவையினருடன் ஒன்றிணைந்து பல நற்கருமங்களை ஆற்றியவர். திருமதி. சந்தனா நல்லலிங்கம் அவர்களும் கணவருக்கு உறுதுணையாக விளங்கியதோடு சந்நிதிவேற் பெருமான் மீதும் கதிர்காமக் கந்தன் மீதும் அளவற்றபக்தி கொள்வது குறிப்பிடப்பட்டது. மஹோற்சவ காலங்களில் அடியார்கள் வருகை அதிகரிக்கும் நாட்களில் பத்தாம் திருவிழா முதல் தீர்த்தோற்சவம் வரை வீதி ஒழுங்கு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை இளைப்பாறிய அதிபர் திரு. கோ. செல்வநாயகம் அவர்கள் இவ்வாலய சுற்றாடல் பாடசாலைச் சாரணர் குழுவினரை ஏற்பாடாக்கி பெரும்பணி ஆற்றுபவர். ஆலயத்தில் 1985 முதல் மஹோற்சவ அடியார்கட்டு வைத்திய வசதிகளுடன் மற்றும் வசதிகளையும் கூட்டி முதலுதவிப் பொறுப்பாளர் திரு. அருந்தவராசா அவர்களும் பலதொண்டர்களை அமர்த்திப் பணிபுரிவதும் விசேடமானது தற்போது செஞ்சிலுவைச் சங்கத்தினரும் ஈடுபடுகின்றனர்.

இம்மலரை வெளியிட்ட பிள்ளையார் அச்சகத்தினர்(நல்லூர்), அச்சகத்தாரும் பணியாளர்களும் மிக்கசிரமங்களை அடைந்தமை குறிப்பிடத்தக்கது. அவர்களது இன்முக சேவையினால் இம்மலர் உருவாகியது.

ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தின் முன்னேற்றம் கருதி பல்வேறு வகையில் பல்வேறு அடியார்களும் நற்பணி புரிந்துள்ளார்கள் அவரகள் எல்லோரிற்கும் எமது மனப்பூர்வ நன்றிகள்.

நாம் மேலே குறிப்பிட்டவர்கள் விஷேட பணிகளை என்றென்றும் செய்ததாலும் தொடர்ந்து செய்வதாலும் அவர்கட்கு விஷேட நன்றிகளை செலுத்த மிகவும் கடமைப்பாடுள்ளதாக அமைகிறது. அனைவர்க்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதி கந்தவேற் பெருமான் நல்லருள் நல்கி சுபீட்ச வாழ்வு கிடைக்க நாமும் வேண்டுதல் செய்து விடைபெறுகின்றோம்.

## நன்றி

- ஆலய உரிமையாளர்கள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

